IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

OS.No. 4703 of 2024

Deposition of witness for

PW 1

| | |
|---|---|
| Name | : Thiru.Balaji |
| Father's Name | : Late V.A. Srinivasan |
| Age | : 60 Years |
| Address | : Flat 4A, CORAL SANDS, 54 B/26, Beach Road, Kalakshetra Colony, Besant Nagar, Chennai-600 090. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of January 2026 .

05.01.2026

PW 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சாட்சி சத்தியய்யப்பட்டார்

நான் அமெரிக்கா சென்று விட்டு 2023 ஏப்ரல் கடைசியில் இந்தியாவிற்கு திரும்பி வந்தேன். அமெரிக்காவிற்கு சென்று விட்டதால் 09.06.2024 நடந்த பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. பொது குழுவில் நடந்த விவரங்களை மேற்படி குழுவில் பங்கு கொண்ட என்னுடைய நண்பர்கள் பலர் என்னிடம் சொன்னார்கள் அவருடைய பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் அவர்களை சாட்சியாக விசாரிக்க அழைத்தால் வருவார்கள் என்று சாட்சி சொல்லுகின்றார். வா.சா.4 ல் என்னுடைய மரியாதைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் சட்டத்திற்கு புறம்பாக கோவிலின் சாவிகளை எடுத்துக் கொண்டு சென்று விட்டதாகவும் அவ்வாறு எடுத்துக்

கொண்டு சென்றது குற்ற நடவடிக்கை எடுக்க கூடிய அளவிற்கு செய்யப்பட்ட தவறு என்றும் கோவிலுடைய கணக்கு வழக்குகளை உரிய நபரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் நான் இந்து சமய அறநிலைத்துறையுடன் உடந்தையாக செயல்படுவதாகவும் திருக்கோவிலின் நலனுக்காக நான் பாடுபடவில்லை என்றும், நானும் இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள என்னுடைய நண்பர்களும் சேர்ந்து கோயிலின் நிர்வாகம் மற்றும் நடவடிக்கை சம்பந்தப்பட்ட விவரங்களை சத் சங்கத்திலும் சொல்லாமல் மறைத்து விட்டோம் என்றும், கணக்கு வழக்குகள் சட்டப்படியான ஆய்வறிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என்று சொல்லப்பட்டு இருப்பதும் நான் கோவில் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை உரிய நபரிடம் ஒப்படைத்த பின்னர் என்ன நடந்தது என்பதை சொல்ல கடமைப்பட்டவர் என்றும் சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தும் என்னுடைய மரியாதைக்கு களங்கம் ஏற்படுத்தும் செயல் என்று சாட்சி சொல்லுகின்றார்.நான் மேலே குறிப்பிட்ட காலகட்டத்தில் கோவிலின் நகைகளை பூட்டி வைத்து விட்டு அதனுடைய எடுத்து சாவி எடுத்துக்கொண்டு அமெரிக்கா சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரிதான்.நான் 18.5.2019 தேதியிட்ட கடிதத்தில்கோவில் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஒப்படைப்பதாக சொல்லி இருக்கின்றேன் ஆனால் அதன்படி ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் இந்து சமய அறநிலைத்துறையால் தக்கராக நியமிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் மேற்படி பொறுப்பில் இருந்து என்னை விடுவித்து கோவில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் உரிய நபரிடம் ஒப்படைக்க சொல்லி உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் மேற்படி என்னிடம் உள்ள பொறுப்புகளை ஒப்படைப்பதாக சொல்லியிருந்தேன். அதுபோல எந்த உத்தரவும் பெற்று வராத காரணத்தினால் கோயில் சம்பந்தமாக என்னிடமிருந்த எந்த ஆவணங்களையும் ஒப்படைக்கவில்லை என்று சாட்சி கூறுகின்றார். மேலே

குறிப்பிட்ட விவரங்களை 18/5/2019 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கின்றேன் என்றால் இல்லை after finishing formalities என்று மட்டுமே குறிப்பிட்டு இருப்பதாக சாட்சி கூறுகின்றனர். வா.சா. 4ல் உள்ள விவரங்கள் என்னுடைய மரியாதைக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடிய விவரங்கள் இல்லை என்றும் நடந்ததை மட்டுமே அதில் குறிப்பிட்டு இருக்கின்றார்கள் என்று சொன்னால் அது தவறு என்று சாட்சி கூறுகின்றனர். 2023 ஆம் வருடத்திலேயே செயல் அலுவலராக நியமிக்கப்பட்டது தவறு என்று நீதிமன்றம் சொல்லிய விவரம் எனக்கு தெரியும். கோவில் தனிப்பட்ட முறையில் யாருக்கும் சொந்தம் கிடையாது பொதுமக்களுக்கு தான் சொந்தமானது. கோவில் கட்டப்பட்ட நிலம் யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. சத் சங்கம் சார்ந்தவர்கள் தான் கோவில் கட்டுவதற்கான நிலத்தை வாங்கினார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நிலம் வாங்கிய சம்பந்தமாக பல பிரச்சனை இருப்பதாக தெரிந்து கொண்டேன். நீதிமன்றத்தில் மேற்படி கோவில் பொது மக்களுக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்திருப்பதாக சாட்சி கூறுகின்றார். அவ்வாறு நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதுவும் தற்சமயம் தன்னிடம் இல்லை என்றும் சாட்சி கூறுகின்றார். நான் சத்சங்கத்தில் இன்றைய தேதி வரை உறுப்பினராக இருக்கின்றேன். நீதிமன்ற உத்தரவுக்கு பின்னர் சத்சங்கமே கோவிலை நிர்வாகம் செய்து பராமரிக்கின்றது என்று சொன்னால் சரிதான். உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் என்னை நீதிமன்றத்தை அவமதித்ததாக சொல்லி இருக்கின்றார்கள் என்று சொன்னால் இந்து சமய அறநிலைத்துறை மீது மட்டுமே நீதிமன்றத்தை அவமதித்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது டிவிஷன் பெஞ்ச் அவர்களாகவே என்னை இரண்டாவது தரப்பினராக சேர்த்து நீதிமன்றத்தை அவமதித்ததாக சொன்னார்கள். நான் உரிய விளக்கத்தை கொடுத்த பின்னர் இந்து சமநிலை சமய அறநிலைத்துறை மட்டுமே

நீதிமன்றத்தை அவமதித்தாக முடிவு செய்து. கோவில் டிரஸ்டியிடம் கோவில் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்கு மற்றும் நகைகளை ஒப்படைக்க கோரி உத்தரவு பிறப்பித்ததாக சாட்சி கூறுகின்றனர். மேலே குறிப்பிட்ட விவரங்களை குறிப்பிட்டு உயர் நீதிமன்றம் உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. ஆனால் வாய்மொழியாக தான் உத்தரவு பிறப்பித்ததாக சாட்சி சொல்லுகின்றார். அது போன்ற உத்தரவு எதுவும் பிறப்பிக்க வில்லை என்று சொன்னால் அது சரியில்லை. நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக அறிவிப்பு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் நான் கோவில் நகைகளை சத் சங்கத்திடம் ஒப்படைத்தேன் என்று சொன்னால் அது சரிதான். எனக்கு நீதிமன்ற அறிவிப்பு வராத பட்சத்தில் நகைகளை கொடுத்திருக்கவே மாட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. 9.11.2024 வரை கோவில் நகைகளை நான் திருப்பிக் கொடுக்கவில்லை என்று என் மீது புகார் இருக்கின்றது என்று சொன்னால் அது சரியல்ல. நான் எனக்கு பின்னால் வந்த தக்காரிடம் மேற்படி நகைகளை ஒப்படைக்க முயற்சி செய்தேன் அவர் பல காரணங்களை சொல்லி மேற்படி நகைகளை திரும்பி பெற்றுக் கொள்ளவில்லை. 10.03.2023 அன்று தக்கரிடம் பொறுப்புகளை ஒப்படைத்த பொழுது அவர் நகைகளை பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் நகை மதிப்பீட்டாளர் வரவில்லை என்ற ஒரு காரணத்தை சொல்லி நகைகளை பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அதற்கு பின்னர் நான் அமெரிக்காவிற்கு செல்ல இருப்பதாக டிக்கெட் உடன் சேர்ந்து இரண்டு கடிதங்களை எழுதி நகைகளை பெற்றுக் கொள்ளச் சொன்னேன். அப்பொழுதும் நகைகளை பெற்றுக் கொள்ள மறுத்துவிட்ட காரணத்தினாலேயே நகைகளின் வைக்கப்பட்டிருந்த சாவியை எடுத்துக்கொண்டு அமெரிக்கா சென்று விட்டதாக சாட்சி கூறுகின்றார். முயற்சி செய்தேன் அவர் பல காரணங்களை சொல்லி மேற்படி நகைகளை திரும்பி பெற்றுக் கொள்ளவில்லை எனக்கு பின்னால் 07.03.2023 அன்று தமிழ்ச்செல்வி என்பவரை

தக்கராக இணை இயக்குனர் இந்து சமய அறநிலைத்துறை அவர்களால் நியமிக்கப்பட்டார் அவர் முண்டக்கண்ணி அம்மன் கோவிலில் செயல் அலுவலரும் கூட என்று சொன்னால் சரிதான். நான் இந்து சமய அறநிலைத்துறையில் கூட்டு சதியில் ஈடுபட்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சச்சங்கத்தில் தலைவராக இருந்த காரணத்தினால் தான் என்னை தக்கராக நியமிக்க சத்சங்கம் பரிந்துரை செய்தது என்று சொன்னால் சரிதான். அடுத்த தலைவர் வரும்போது நானாகவே என்னுடைய பொறுப்பில் இருந்து வெளியே சென்று இருக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. சத்சங்கத்தின் பரிந்துரையின் பேரில் என்னை இந்து சமய அறநிலைத்துறை தக்கராக நியமித்த பின்னர் அவர்கள் மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை நான் அந்த பொறுப்பில் இருந்து விடுபட முடியாது என்று சாட்சி கூறுகின்றார். இந்து சமய அறநிலைத்துறையில் இருந்து என்னை விடுவிக்க உத்தரவு வரவில்லை என்ற காரணத்திற்காக நான் மேற்படி பொறுப்பில் இருந்து வெளியேறவில்லை என்று சொல்வது கூட சச்சங்கத்திற்கு எதிராக நான் செயல்படுவதற்கு மற்றொரு உதாரணம் என்று சொன்னால் அது சரியல்ல. நான் தக்கராக இருப்பதற்கு தகுதி இல்லை என்று இந்து சமய அறநிலையத்துறை உத்தரவு பிறப்பித்தது என்று சொன்னால் அது சரியல்ல. 22.4.2019 அன்று சத்சங்கத்தின் தலைவருக்கு இந்து சமய அறநிலைத்துறை 2014 ஏப்ரல் மாதத்திலேயே பாலாஜி அவர்கள் தலைவராக இல்லாத பட்சத்தில் அதற்கு பின்னால் வந்த தலைவரிடம் ஏன் தக்கர் பொறுப்பை ஒப்படைக்கவில்லை என்று கோரி ஒரு கடிதத்தை அனுப்பி இருந்தார்கள் அந்த கடிதத்தை அனுப்பி இருந்த விவரத்தை தெரிந்து கொண்டு தான் நான் 18.5.2019 அன்று என்னை மேற்படி பொறுப்பில் இருந்து உரிய formalities ஐ முடித்து விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டேன் என்று சாட்சி கூறுகின்றார். மேற்படி விபரங்கள் அனைத்தும் நான் என்னுடைய தாவாவில் சொல்லவில்லை என்று

சொன்னால் அது சரியல்ல. எனக்கு 2019 ஆம் வருடத்திலேயே தக்கராக இருப்பதற்கு அருகதை இல்லை என்று தெரிந்தும் நான் எவ்வாறு அந்த பொறுப்பை தக்க வைத்துக் கொள்வது என்பதற்காகவே தொடர்ந்து என்னிடம் இருந்த பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருந்தது மற்றொரு உதாரணம் என்று சொன்னால் அது சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

*Sd/-K.Geetharani, M.A., M.L.,*

Dt.05.01.2026

III Addl.District Judge.
II Additional District Court(FAC)
City Civil Court, Chennai.